தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 08.07.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 3092/F/2023**

திரு.செ.பாக்யராஜ் .. மனுதாரர்

*/எதிர்/*

பொதுத்தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியர்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி-606202. .. பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வாணையத்தில் இன்று 08.07.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.செ.பாக்யராஜ் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திருமதி.ஆர்.ராஜலட்சுமி, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 31.05.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள் தினக்கோரிக்கை மனு நாளில், குறைதீர்க்க வேண்டி 12 மனுக்கள் கொடுத்ததாகவும் கொடுக்கப்பட்ட மனுக்களின் மீது தங்கள் அலுவலகம் மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள வட்டாட்சியர் அலுவலகம் விசாரணை செய்யப்பட்டதற்கான நிலை விபரம் (ஏற்பு, நிலுவை, நிராகரிப்பு) தகவல் மற்றும் அதற்கான ஆவணங்களின் சான்றிடப்பட்ட நகல் என்பன போன்ற 10 இனங்களில் தகவல்களை கோரியுள்ளார்.

3. அதனைப்பெற்ற பொதுதகவல் அலுவலர் 13.06.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 19(1)ன்

கீழான 03.07.2023 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 18(1)ன் கீழ் 22.08.2023 நாளிட்ட புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (08.07.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு 13.06.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியிருப்பதாகவும் மேலும் மேல்முறையீட்டு அலுவலர் / வருவாய் கோட்டாட்சியர் 24.07.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியிருப்பதாகவும் கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு தகவல் தேவையில்லை என்றும் உரிய தகவலை வழங்காத, பொதுத்தகவல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

5. இவ்வாணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஏற்புடையது அல்ல என்பதையும் மனுதாரர் தனக்கு தகவல் வேண்டாம் எனக்கூறியதையும் பதிவு செய்து இவ்வாணையம் கீழ்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது.

**“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள 31.05.2023 நாளிட்ட மனுவிற்கு 13.06.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் தவறான தகவல் வழங்கிய அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திரு.R.பாலசுப்ரமணியன், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி அவர்களுக்கு சட்டப்பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 19.08.2026 அன்று அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு இவ்வாணையம் ஆணையிடுகிறது”.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 3092/F/2023**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத்தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியர்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி-606202.

**திரு.R.பாலசுப்ரமணியன்.**
**அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,**
வருவாய் கோட்டாட்சியர்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி-606202.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**மனுதாரர்**
திரு.செ.பாக்யராஜ்,
மாரியம்மன் கோவில் தெரு,
கரடிசித்தூர் கிராமம் மற்றும் அஞ்சல்,
சின்னசேலம்,
கள்ளக்குறிச்சி-606207.

Copy to file: KR/PA